Ontario
News Release
Communiqué
2007 ONTARIO BUDGET
BUDGET DE L'ONTARIO 2007
Investing in People
Expanding Opportunity
Ontario's New Economic Strength
Investir dans les gens
Accroître les possibilités
Nouveau dynamisme économique de l'Ontario

உடனடி செய்தி வெளியீட்டுக்கு
மார்ச் 22, 2007

# மக்கின்ரி அரசாங்கத்தின் 2007 வரவு செலவுத் திட்டம்
# பொருளாதார பலம் மிக்க ஒரு புதிய சகாப்தத்தில் வாய்ப்பினை விரிவு படுத்துகிறது

குழந்தைகள், குடும்பங்களுக்கு உதவ 2.1 பில்லியன் டொலர் மற்றும் சமநிலைப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்துக்கான ஒரு மீள் திருப்பம்

**குயீன்ஸ் பார்க்** - மக்கின்ரி அரசாங்கத்தின் நான்காவது வரவு செலவுத் திட்டம் சிறுவர்களில் முதலீடு செய்தல், கல்வியைத் தொடர்ந்து பலப்படுத்தல், சுகாதார பராமரிப்பு, உட்கட்டமைப்பு, வரவு செலவுத் திட்டத்தைச் சமப்படுத்தல் என்பன ஊடாக சகல ஒன்ராறியோ வாசிகளுக்குமான வாய்ப்பை விரிவாக்குகின்றது.

“வெற்றி பெறுவதற்கெனக் கடினமாக உழைக்கும் குடும்பத்தவர்களுக்கும் அவர்களது பிள்ளைகளுக்கும் இந்த வரவு செலவுத் திட்டம் வாய்ப்பை விரிவுபடுத்துகின்றது” என ஒன்ராறியோ நிதியமைச்சர் கிறேக் சொர்பாரா கூறினார். “வாய்ப்பை விரிவாக்குதல் புதிய பொருளாதார வலுவை உருவாக்குகிறது என்பதுடன் ஒரு வெற்றிகரமான, கரிசனை மிக்க, பரிவு மிக்க சமூகத்துக்கான அடித்தளத்தையும் நிறுவுகிறது”

பூரணமாக அமுல் படுத்தப்படும்போது அநேகமாக வருடாந்தம் 1.3 மில்லியன் சிறுவர்கள் பயன்பெறக்கூடியதும், முதல் ஐந்து வருடங்களில் மேலும் 2.1 பில்லியன் டொலர் வழங்கவிருப்பதுமான ஒரு புதிய Ontario Child Benefit (OCB) உட்பட, சிறுவர்கள், குடும்பங்களுக்கு உதவுவதற்கென்று பல முன்னெடுப்புக்களை இந்த 2007 வரவு செலவுத் திட்டம் அறிவிக்கின்றது. தமது பிள்ளைகளுக்கான ஆதரவை இழப்பது குறித்த கவலையின்றி, சமூக உதவிலிருந்து பெற்றோர் வெளியேற முடியம் என்பது அதன் பொருளாகும்.

குறைந்த வருமானமுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 18 வயதுக்குக் குறைந்த சகல சிறுவர்களுக்கும் இது நன்மைகளை வழங்கும். பின்வருவன உட்பட, இந்த வரவு செலவுத் திட்டத்தில், பிரேரிக்கப்பட்ட முதலீடுகளில் OCB ஒரு பகுதியாக இருப்பதுடன் சிறுவர்கள், குடும்பங்களுக்கு உதவும் ஏனைய வழிமுறைகளும் அடங்கும்:

- Ontario Works மற்றும் Ontario Disability Support Program கொடுப்பனவுகளில் இரண்டு சதவீத அதிகரிப்பு;
- ஒரு மணித்தியாலத்துக்கான ஆகக் குறைந்த கூலியை 2010இல் 10.25 டொலராக அதிகரித்தல்;
- 2008-09கள் தொடக்கம் தொடர்ந்து தற்போது இடம்பெற்றுவரும் ஆதரவு, வருடாந்தம் 50 மில்லியன் டொலராக வளரும் வகையில், 2007-08இல் மேலதிக 25 மில்லியன் டொலர் ஊடாக, சிறுவர் பராமரிப்பை அதிகரித்தல்;.
- புதிய இயலுமான வீடமைப்புச் செயல் திட்டங்கள்;
- பூட்டி வைக்கப்பட்ட கணக்குகளை ஓய்வூதியக்காரர் பெறுவதற்கான வாய்ப்பை அதிகரிப்பதுடன், ஓய்வூதிய வருமான பிரிப்புக்கு அனுமதித்தல்;
- சுமார் 155,000 காயமடைந்த வேலையாட்களுக்கு கூடுதலான நன்மைகள்;

ஒக்ரோபர் 2003 தொடக்கம், ஒன்ராறியோவில் மொத்தம் 327,000 புதிய வேலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அடுத்து வரும் மூன்று வருடங்களில் மேலும் 270,000 புதிய வேலைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

வரி அதிகரிப்பைக் கொண்டிராத 2007 வரவு செலவுத் திட்டம், 2003-04இல் திணிக்கப்பட்ட 5.5 பில்லியன் டொலர் பற்றாக்குறையை அகற்றி, அடுத்தடுத்து இரண்டாவது தடவையாக 2006-07இல் ஒரு சமநிலைப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை உத்தேசிக்கின்றது.

“2006-07இல், எதிர்பார்த்ததைவிட அரசாங்க வருமான வளர்ச்சி, கடனிறுப்பு வட்டிக் குறைப்பு என்பன திறமையாகச் சாதித்துள்ளன” என்று சொர்பாரா கூறினார், “நாங்கள் சமநிலைப் படுத்தப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தின் சகாப்தம் ஒன்றுக்குள் காலடி எடுத்து வைக்கின்றோம்; உண்மையில், கையிருப்பு தேவைப்படாத பட்சத்தல், ஐந்து தொடர்ச்சியான மிகை வரவு செலவுத் திட்டத்துக்கான சரியான பாதையில் 2007-08இல் நாம் உள்ளோம்”

..../2

ஒன்ராறியோவின் வீட்டுச்சொத்து வரியின் நியாயத் தன்மையை அதிகரிப்பதற்கான பிரேரணைகள் மற்றும் உயர் வியாபாரக் கல்வி வரிகளில் குறைப்பு என்பன 2007 வரவு செலவுத் திட்டத்தின் ஏனைய பிரதான முலகங்களாகும்.

“அனுமானிக்கக்கூடியதும் நியாயமானதுமான சொத்து மதிப்பீட்டுத் தொகுதி ஒன்று தேவை என்று வீட்டு உரிமையாளர்களும் உள்ளூராட்சியாளர்களும் எங்களிடம் கூறியுள்ளனர்” என சொர்பாரா கூறினார். “தம்மை நீதியாக நடத்துகின்ற, போட்டியைத் தடை செய்யாத அமைப்பு ஒன்று வியாபாரச் சொத்து உரிமையாளர்களுக்குத் தேவைப்படுகின்றது”.

வீட்டுச் சக்திக் கணக்குப் பரிசோதனை மீள்கொடுப்பனவுகள், மாகாணம் முழுவதும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மரங்களை நடுவதற்குப் போதுமான Trees Ontario Foundation நிதியளிப்பு என்பன உட்பட, சுமார் 125 மில்லியன் டொலரையும் உடனடி சூழல் முன்னெடுப்புகளுக்கென இந்த வரவு செலவுத் திட்டம் அறிவிக்கின்றது. ஒரு பசுமையான பொருளாதாரத்தை நிறுவுவதற்கான திட்டம் ஒன்றை அரசாங்கம் எதிர்வரும் இலைதுளிர் காலத்தின் போது வெளியிடும்.

பின்வருவன உட்பட, ஆரோக்கிய பாராமரிப்பு, கல்வி, உட்கட்டமைப்பு ஆகிய துறைகளிலும் கணிசமான முதலீடுகளையும் 2007 வரவு செலவுத் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளும்:

- ஒவ்வொரு புதிய ஒன்ராறியோ தாதியர் பட்டதாரிக்கும் முழு நேர வேலை வாய்ப்பு வழங்குவதற்கென, மொத்தத் தொகையை 89 மில்லியன் டொலராக்கும் வகையில், ஒரு மேலதிமான 43 மில்லியன் டொலருடன், 2007-08இல் ஆரோக்கிய பாராமரிப்புச் செலவுக்கென 37.9 பில்லின் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது. நீண்ட காலப் பராமரிப்பு இல்லங்களில் கூடுதலான தாதியர் பணியாற்றும் வகையில் 14 மில்லியன் டொலர் அதிகரிப்பு, மற்றும் சிறுவர் சத்திர சிகிச்சைக்கான காத்திருப்பு நேரம் உட்பட, நோயாளர் காத்திருப்பு நேரத்தை மேலும் குறைப்பதற்கென ஒதுக்கப்படும் 135 மில்லியன் டொலர் என்பவற்றை இது உள்ளடக்கும்.
- கடந்த வருடத்திலிருந்து சுமார் $800 மில்லியனும், 2003-04 நிதியளிப்பிலிருந்து 17 சதவீதமும் அதிகரிப்பாக இருக்கும் வகையில், 2007இல் பாடசாலைச் சபைகளுக்கு $18.3 பில்லியன் மானியம் வழங்கப்படுகிறது. தொடர்ந்து பிரதான வகுப்பு எண்ணிக்கையைக் குறைத்து, மேலும் ஆரம்ப கல்வி ஆசிரியர்களை வேலைக்கமர்த்தி, உயர்வான பரீட்ஷைப் புள்ளிகள் மற்றும் பாடசாலைப் பட்டம் பெறும் உயர்ந்த வீதம் என்பவற்றைக் கட்டி எழுப்புவதற்கான கடப்பாட்டுக்கு இது உதவும்.
- 2007-08இல், கல்லூரிகள், பல்கலைக் கழகங்களுக்கான அடிப்படை செயற்பாட்டு மானியத்துக்கென 4 பில்லியன் டொலர். மற்றும் அதிக வகுப்பறை இடவசதிகள், கூடுதலான மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளல், பயிற்சி என்பவற்றுக்கு உதவவென பல்கலைக் கழகத்துக்கு முன்னரான கல்வி நிலையங்களுக்கு மேலும் 390 மில்லியன் டொலர்; மற்றும்
- போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், மருத்துவ மனைகள், பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், கிராமிய உட்கட்டமைப்பு என்பவற்றிற்கென 2007-08இல் உட்கட்டமைப்பு முதலீட்டில் 5.9 பில்லியன் டொலர்.

“மக்கின்ரி அரசாங்கத்தின் திட்டம் ஒன்ராறியோ வாசிகளுக்கு நன்மையளிக்கின்றது. கல்வி கற்பதற்கு எங்கள் பாடசாலைகள் மேலும் சிறந்த இடங்கள். எங்கள் கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் விரிவடைகின்றன. எங்கள் ஆரோக்கிய பராமரிப்பு அமைப்பு ஆரோக்கியமாகவும் சிறப்பாகப் பதிலிறுக்கக் கூடியதாகவும் உள்ளது. மாகாணம் முழுவதும் புதிய உட்கட்டமைப்பை நாங்கள் கட்டியெழுப்பி வருகிறோம். எங்கள் பொருளாதாரம் வளர்ந்து வருகிறது” என சொர்பாரா கூறினார். “மிகவும் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய குடியானவர்களுக்கான வாய்ப்பை அதிகரித்தல், பொது மக்கள் சேவைகளை அதிகரிக்கும் வகையில் புதிய மூலவளங்களை நெறிப்படுத்தல், எங்கள் பொருளாதார திறமையை வலுப்படுத்தல், மேலும் பசுமையான ஒன்ராறியோவுக்கான முன்னெடுப்புக்களை ஆரம்பித்தல் என்பவற்றுடன் ஒரு சமநிலைப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் மற்றும் நிலைபெறக்கூடிய மிகையான நிதி என்பவற்றின் சகாப்தம் ஒன்றை இன்று நாங்கள் ஆரம்பிக்கின்றோம்”.

- 30 -

தொடர்புகளுக்கு:

Michael Arbour
Minister's Office
*416-325-4138*

Scott Blodgett
Ministry of Finance
*416-325-0324*

Tamil

---

Ce budget est également disponible en français.
You can access the 2007 Budget and all related budgets at www.ontariobudget.ca or by calling 1-800-337-7222.